# நீதிமொழிகள்

**Pastor Gabriel Thomasraj**

## "நீதிமொழிகள்" என்று பெயர் பெறக் காரணம்

- எபிரேய வேதாகமத்தில் இது "சாலொமோனின் நீதிமொழிகள்" என்று அழைக்கப்படுகிறது.
- கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டபோது Paroimiai என்றும் ஆங்கிலத்தில் Proverbs என்றும் பெயரிடப்பட்டது,
- வேதாகமத்தின் கவிதை நூல்கள் வரிசையில் யோபின் புத்தகம், சங்கீதங்களுக்கு அடுத்து மூன்றாவது இடத்தில் இது இடம்பெற்றுள்ளது.
- ஞானப்புத்தகங்களில் இது முதலாம் இடத்தில் வருகிறது. அடுத்த இரண்டு இடங்களில் பிரசங்கியும்,
- சாலொமோனின் உன்னதப்பாட்டும் இடம்பெறுகிறது.
- நீதிமொழிகள் நீண்ட அனுபவத்தின் பின்னணியில் அறிவிக்கப்படும் சிறிய அறிவுரைகள்.
- பொதுவான உலக கலாச்சாரங்கிளிலும், இலக்கியங்களிலும் நீதிமொழிகள் என்பது சுருக்கமான, எளிமையான புகழ்பெற்ற கூற்றுக்களாகவும் அல்லது நடைமுறை அனுபவத்தினாலோ, இயல்பான அறிவினாலோ பெற்றுக்கொண்ட பொதுவான உண்மையை திறம்பட எடுத்தியம்பும் சொற்தொடராகவோ இருக்கிறது.
- இந்தப் புத்தகத்தில் ஒரு குறிக்கப்பட்ட சம்பவமோ, கதையோ, வரலாற்று நிகழ்வின் விபரிப்போ. முக்கி கதாபாத்திரங்களோ இல்லை.
- இந்த உலகில் ஞானமாய் வாழ்வது எப்படி என்பதை சொல்லித்தருகிறது இந்தப் புத்தகம்.
- அதிகாரங்கள் 31<br>வசனங்கள் 915

# நீதிமொழிகளை ஆக்கியோன்

- இந்த புத்தகத்தை ஆக்கியோன் சாலொமோன் என்பது பாரம்பரிய நம்பிக்கை.
- சாலொமோனே இதை ஆக்கியோனாக தன்னை அடையாளப்படுத்துகிறான். இந்த புத்தகத்தின் மூன்று தெளிவான பிரிவுகளின் ஆரம்பத்தில் அவனது பெயர் வருகிறது. (நீதி 1:1,10:1,25:1)
- இது இந்தப் புத்தகத்தின் 29 அதிகாரங்கள் வரைக்கும் நீள்கிறது.
- இதன் பெரும்பகுதி கிமு931ல் அவன் மரணமடைவதற்கு முன்பாக தொகுக்கப்பட்டது. அதிகாரங்கள் 25-29 பகுதிகள் எசேக்கியாவின் மனிதர் பேர்த்தெழுதின சாலொமோனின் நீதிமொழிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை கொண்டு பார்க்கும்போது இந்தப் புத்தகம் யூதாவாகிய தெற்கு இராஜ்யத்தில் இருந்திருக்க வேண்டும்.
- இது எசேக்கியாவின் ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதியான கிமு686ல் அதனது இறுதி வடிவத்தை எட்டியிருக்ககூடும்.

# சாலொமோனின் ஞானம்

- சாலொமோனின் அசாதாரண ஞானம்,தேவன் அவனிடத்தில் அவனுக்கு அத்தியாவசியமாக என்ன வேண்டும் என்று சொப்பனத்தில் அவனிடத்தில் கேட்டதிலிருந்து ஆரம்பிக்கிறது.
- . அதற்கு அவன் "நன்மை தீமை இன்னதென்று வகையறுக்க ஞானமுள்ள இருதயத்தைத் தாரும்" (1இரா 3:9) இதற்கு முன் அவன் தன்னை "சிறுபிள்ளையாயிருக்கிறேன்" என்று சொல்லியிருந்தான் (1இரா 3:6) .
- . தேவன் அந்த ஜெபத்திலே பிரியப்பட்டு அவனது விண்ணப்பததை கேட்டு, "ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை" என்று வாக்குப்பண்ணினார்.

**1 இராஜா 4:29-31,34**

- அவனது மிகுதியான ஞானம், பகுத்தறிவு. புரிந்துகொள்ளும் ஆற்றல் கடற்கரை மணலைப்போல அதிகமாயிருந்தது.

- கிழக்கு தேசம் மற்றும் எகிப்தின் ஞானவான்களை காட்டிலும் இவனது ஞானம் மேலானதாயிருந்தது.

- அவனது புகழ் சுற்றியிருந்த நாடுகளுக்கெல்லாம் பரவியிருந்தது.

- சாலொமோனின் ஞானத்தை கேட்க சகல தேசங்களிலிருந்தும் ஜனங்கள் வந்தார்கள்.

- வெளி தேசங்களிலிருந்து நீண்ட பயணங்கள் செய்து ஞானமுள்ள பேரரசன் பேசுவதை கேட்க
  வருகைபுரிந்த முக்கியஸ்தர்களில் குறிப்பிடத்தகுந்தவள் சேபாவின் ராஜாத்தி (1இரா 10:1-10)

- சேபா என்னும் தேசமானது சபா என்றழைக்கப்பட்ட செங்கடல்பகுதியின் கடற்கரையை ஒட்டிய பிரதேசம். இன்று இவை எரித்திரியா,சோமாலியா, எதியோப்பியா, யேமன் நடுகளின் பிரதேசம். சாலொமோன் 3000 நீதிமொழிகளை சொன்னதும் 1000க்கும் மேற்பட்ட கவிதைகளை இயற்றியதும்

- இந்த சந்திப்பினால் விளைந்த பலன்கள். கேதுரு மரங்கள் முதற்கொண்டு வெவ்வேறு விலங்கினங்கள்வரை பேசத்தக்க பரந்த அறிவு .
  அவனுக்கிருந்தது (1இரா 4:32-33)

- சாலொமோன் அவனது நீதிமொழிகள் தவிர்ந்த ஏனைய நீதிமொழிகளை சேர்ப்பதையும்,
  தொகுப்பதையும் செய்தான் என்று அனுமானிக்க முடிகிறது.

- பிரசங்கி 12:9-11 மேலும், பிரசங்கி ஞானவானாயிருந்தபடியால், அவன் ஜனத்துக்கு அறிவைப்போதித்து, கனைமாய்க் கேட்டாராய்ந்து, அநேகம் நீதிமொழிகளைச் சேர்த்து எழுதினான. இதமான வார்த்தைகளைக் கண்டு பிடிக்கப் பிரசங்கி வகைதேடினான்; எழுதின வாக்கியங்கள் செவ்வையும் சத்தியமுமானவைகள். ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள்போலவும் சங்கத்தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள்போலவும் இருக்கிறது; அவைகள் ஒரே மேய்ப்பனால் அளிக்கப்பட்டது.
-
- கடைசி இரண்டு அதிகாரங்கள் ஆகூர் என்பவனாலும் (30:1),லேமுவேல் என்பவனாலும் (31:1) எழுதப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் இவர்கள் யாரென்பது வரலாற்றின் மௌனங்களில் ஒன்று.

# முக்கியமாக வலியுறுத்தப்படும் அறிவுரை

. மற்றப் புத்தகங்கள் ஆழமான இறையியல் சத்தியங்களையும் அல்லது வெற்றி, தோல்விகள் குறித்த நீண்ட சம்பவ விபரிப்புக்களையும் அல்லது கீழ்ப்படியாத ஜனங்களுக்கு பேசப்பட்ட தீர்க்கதரிசன உரைகளையும் கொண்டிருக்கும்போது நீதிமொழிகள் ஜனங்களை ஞானத்தின் பாதையில் இட்டுச்செல்லும் அறிவுரையை சொல்லுவதில் மாத்திரமே கவனம் கொண்டிருக்கிறது.

. இங்கு ஞானமானது படுக்கையிலிருந்து எழுவதில் தொடங்கி மனித வாழ்வின் ஒவ்வொரு பகுதிகளிலும் நலமானவற்றை செயல்படுத்தத்தக்க தார்மீக நெறிமுறைகளையும், சரியான நடத்தை விதிகளையும் அறிவார்ந்த விதத்தில் பயன்படுத்துவது குறித்து விபரிக்கிறது.

# ஞானவானாயிருக்க நீதிமொழிகள் தரும் இரண்டு ஆலோசனைகள்

**a)** கர்த்தருக்கு பயப்படுதல்

- . இதற்கான இறையியல் அடிப்படை நீதி 1:7 "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்"
- . தேவனாகிய கர்த்தருக்கே சகல கனத்தையும் செலுத்தி அவரை முழு இருதயத்தோடும் நம்புவது.

**b)** செவிகொடுததலின் முக்கியத்துவம்

- நமது வாழ்க்கையின் முக்கிய தருணங்களில் செயல்படுவதற்குரிய ஞானத்தை அடைய நமக்கு முன் சென்றவர்களான முதியோர்களும், பெற்றோர்களும் சொல்லிவைத்த அறிவுரைகளை செவிமடுப்பதின் அவசியத்தை இந்த புத்தகத்தின் பெரும்பகுதி வலியுறுத்துகிறது. (1:5,8)

# இந்தப் புத்தகத்தின் நோக்கம் (நீதி 1:2-6)

**1.** ஞானத்திலும், அறிவுரையிலும், புரிந்துணர்விலும் வளர

வச.2 இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து புத்திமதிகளை உணர்ந்து.

**2.**நமது நடக்கைகளில் மேம்பட

வச.3 விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம்.

**3.**இளையோருக்கு அறிவுரை சொல்ல

வச.4.5 இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத் தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து;

**4.** ஞான வார்த்தைகளின் உட்கருத்தை வெளிப்படுத்த

வச.6-நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும் அறிந்துகொள்வான்.

# விபரிப்பின் முறைகள்

நீதிமொழிகளின் கவிதை பல வித்தியாசமான வடிவங்களில் சொல்லப்படுகிறது

**1.**உரை **-Discourse**

நீதிமொழிகளின் முதல் 9 அதிகாரங்கள் ஞானத்தின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கிறது.

இந்த விவாதம் படிப்படியாக கட்டமைக்கப்படுகிறது.

ஞானமானது வாலிபர்களை ஈர்க்கும், வெகுமதியளிக்கும், பாதுகாக்கும் ஒரு பெண்ணாக உருவமைக்கப்பட்டிருக்கிறது.

**2.** இரு வரிகள் **- Two-liners**

* முதல் ஒன்பது அதிகாரங்களை கடந்தபின்பு பெரும்பாலான பகுதிகள் இரு வரிகள் கொண்டவையாக இருக்கின்றன

மூன்று வகைகளை காணமுடியும்

1.ஒப்புமை (26:17)
2. முரண் (10.7)
3. விளைவு (25:17)

**3.** பட்டியல் **- Lists**

இங்கொன்றும், அங்கொன்றுமாக கவனிக்கப்பட்டதிலிருந்து எட்டப்பட்ட பொதுவான கருத்தை தீர்க்கமாக வெளிப்படுத்தும் தொகுப்பு.(30:29-31)

**4. அகரவரிசை - Acrostics**

31:10-31 இதில் ஒவ்வொரு வரியின் முதல் சொல்லும் எபிரேய அகரவரிசைப்படி உள்ள எழுத்தைக் கெண்டு ஆரம்பிக்கும் வண்ணமாக அமைக்கப்பட்டுள்ளது.

# நீதிமொழிகளில் உள்ள நான்கு பெண்கள்

*ஞானமாக உருவகப்படுத்தபடும் பெண் **(1:20-21, 3:14-18, 4:7-8, 8:1-36, 9:1-12)**

8ம் அதிகாரத்தில், ஞானமாக உருவகப்படுத்தபடும் பெண் தனக்காக பேசுகிறாள். அவன் அழகுள்ளவள் மாத்திரமல்ல வலிமையுள்ளவளுமா யிருக்கிறாள். ராஜாக்களும் அவளிடத்தில் ஆலோசனை கேட்க வருகிறார்கள்.

*பேதையாக உருவகப்படுத்தபடும் பெண் **(9:13-18)**

*கட்டுகிற பெண்

- . புத்தியுள்ள பெண் - 14:1
- . நல்லொழுக்கமுள்ள பெண் 11:16
- குணசாலியான பெண் - அதி 31

*தகர்க்கிற பெண்

- வேசியான பெண்-23:27
- . பரத்தையான பெண் -அதி 7
- ... சண்டைக்காரியான பெண் 21:9
- . மதிகேடான பெண் - 11:22

# இந்த புத்தகத்தை குறித்த சுருக்கமான விளக்கம்

முன்னுரை: நோக்கமும் ஆய்வுப்பொருளும் (1:1-7)

ஞானத்தினால் உண்டாகும் மேன்மையான வழி (1:89:18)

வாலிபம் குறித்த அறிவுரைகளும், எச்சரிக்கைகளும் (1:8-33)

1. மகிழ்ச்சியை தக்கவைத்துக்கொள்ள பிரயத்தனம் (1:8-19)

2. ஞானத்தை தள்ளிவிடுவதினால் உண்டாகும் விளைவுகள் குறித்த எச்சரிக்கை (1:20-33)

ஞானம் குறித்த புகழுரை (அதி 24)

1. ஞானத்தின் அறிவுரையை ஏற்பதால் உண்டாகும் நன்மைகள் (அதி 2)

2. ஞானத்தால் உண்டாகும் நல்வாழ்வு (3:1-20)

3. ஞானத்தின் அறிவுரையும் நன்மைகளும் (3:21-35)

4. ஞானத்தை பற்றிக்கொள்வதிலுள்ள சவால்கள் (அதி 4)

மதியீனம் குறித்த எச்சரிப்புக்கள் (அதி 5.7)

1. விபசாரம் குறித்த எச்சரிக்கை (அதி 5)

2. விபரீத

2. விபரீத செய்கையின் வழிகள் குறித்த எச்சரிக்கை (அதி 6:1-19)

3. விபசாரத்தின் விளைவுகள் (6:20-35)

4. விபசாரியின் நயவஞ்சகம் குறித்து எச்சரிக்கை (அதி 7)

இளவயதினருக்கான வேண்டுகோள் (அதி 8-9)

ஞானத்தின் வேண்டுகோள் (அதி 8)

ஞானமுள்ளவர்களுக்கும். மதியினருக்கும் அழைப்பு (அதி (9)

சாலொமோனின் நீதிமொழிகளின் பிரதான தொகுப்பு
(10:1-22:16)

ஞானத்தின் முப்பது கூற்றுக்கள் (22:17-24:22)

ஞானத்தின் மேலதிக கூற்றுக்கள் (24:23-34)

எசேக்கியா தொகுத்த சாலொமோனின் நீதிமொழிகள் (அதி 25-29)

ஆகூரின் கூற்றுக்கள் (அதி 30)

ராஜாவாகிய லேமுவேலின் கூற்றுக்கள் (31:1-9)

முடிவுரை: அதி சிறந்த மனையாள் (31:10-31)